**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 295 /2023**

**Deposition of P.W.** 8

Name : திரு. மோசஸ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 28.01.2026

Accused Present

**முதல் விசாரணை–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போதுபெற்று காஞ்சிரங்கோட்டில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் காவல்நிலையத்தில் 05.04.2023ம் தேதி 02.00 மணிக்கு நான் பணியில் இருந்த போது சேகரபிள்ளை, சுரேஷ்குமார் என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 62/2023 பிரிவுகள் 3 (1) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்துவதின் சட்ட படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் ½ கி.மீ தூரம் இருக்கும். மங்கலத்திலிருந்து வரக்கூடிய வாகனங்கள் அனைத்தும் எங்கள் காவல்நிலையத்தின் வழியாக தான் திருவட்டார் செல்ல வேண்டும் என்றால் சரிதான். புகாரில் எதிரியின் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு பதிவு செய்த அன்றே அனுப்பி விட்டேன். பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.